# காஸாவில் மனிதாபிமான நிவாரண உதவிகள்: இஸ்ரேல் அனுமதி

**கான் யூனிஸ், அக். 18:** போரால் கடந்த 12 நாள்களாக முற்றிலும் முடக்கப்பட்டுள்ள காஸா முனையில் மனிதாபிமான உதவிகள் அளிக்க இஸ்ரேல் அனுமதி அளித்துள்ளது.

கடந்த 7-ஆம் தேதி ஹமாஸ் படையினர் நடத்திய திடீர் தாக்குதலில் உயிரிழந்த இஸ்ரேலியர்களுக்கு ஆதரவு தெரிவிக்க அந்நாட்டுக்கு புதன்கிழமை சென்ற அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கேட்டுக்கொண்டதன்பேரில் இந்த அனுமதியை அளிப்பதாக இஸ்ரேல் புதன்கிழமை தெரிவித்தது.

காஸாவில் குடிநீர், உணவு, மருந்துப் பொருள்கள், மின்சாரம் இல்லாமல் மக்கள் கடும் அவதிப்பட்டு வருகின்றனர். முஸ்லிம் நாடுகள் அனுப்பிய மனிதாபிமான அவசர நிவாரணப் பொருள்கள் அடங்கிய 300 டிரக்குகளை எகிப்து எல்லையில் கடந்த சில நாள்களாக இஸ்ரேல் தடுத்து நிறுத்தி உள்ளது.

இந்நிலையில், 'உணவு, குடிநீர், மருந்துப் பொருள்கள் மட்டும் காஸாவுக்குள் ராஃபா எல்லை வழியாக எகிப்திலிருந்து அனுமதிக்கப்படும்' என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் புதன்கிழமை அறிவித்தது. ஆனால், இதற்கான தேதியை இஸ்ரேல் குறிப்பிடவில்லை.

**மருத்துவமனை மீது தாக்குதல்:** முன்னதாக, பைடன் வருகைக்கு முன்பு செவ்வாய்க்கிழமை இரவு காஸாவில் கிறிஸ்தவ சேவை மையத்தால் நடத்தப்படும் மருத்துவமனை மீது இஸ்ரேல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதில் சுமார் 500 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை எழுப்பியது. இதற்குக் கண்டனம் தெரிவித்து, அமெரிக்க அதிபர் பைடனுடனான சந்திப்பை பாலஸ்தீனம், ஜோர்டான், எகிப்து நாடுகளின் அதிபர்கள் புதன்கிழமை ரத்து செய்தனர். இஸ்ரேல்- ஹமாஸ் இடையிலான போர் இஸ்லாமிய நாடுகளுக்கு விரிவடைவதைத் தடுக்க பைடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டிருந்தார்.

**பரஸ்பரம் குற்றச்சாட்டு:** காஸா மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு இஸ்ரேலும், ஹமாஸ் அமைப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டை சுமத்தி வருகின்றன. காஸாவிலிருந்து வீசப்பட்ட ராக்கெட் தவறுதலாக அருகே உள்ள மருத்துவமனை மீது விழுந்தது என்று இஸ்ரேல் குற்றம்சாட்டியது.

பாலஸ்தீனத்தின் ஆயுதக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் இந்த ராக்கெட்டை ஏவியதாகவும், இதற்கான ஆதாரம் உள்ளதாகவும் இஸ்ரேலிய ராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டை இஸ்லாமிய ஜிஹாத் மறுத்துள்ளது. அந்த மருத்துவமனையை உடனடியாக மூட எச்சரித்து அங்கு இஸ்ரேல் முன்பும் தாக்குதல் நடத்தி உள்ளதே இதற்கு ஆதாரமாகும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. மருத்துவமனை மீதான தாக்குதல் இஸ்ரேலின் கொடூரமான படுகொலை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலை கண்டித்து ஆக்கிரமிப்பு மேற்கு கரை, எகிப்து, லெபனான், ஜோர்டான், ஈரான் உள்ளிட்ட நாடுகளில் பெரும் போராட்டங்கள் நடைபெற்றன.

இதனிடையே, காஸா மீதான தாக்குதலுக்காக இஸ்ரேலை பழிவாங்கப்போவதாக ஈரான் அதிபர் இப்ராஹிம் ரய்சி எச்சரித்தார்.

## மருத்துவமனை தாக்குதலுக்கு வேறு குழு காரணம்: அமெரிக்க அதிபர்

**டெல் அவிவ், அக். 18:** காஸா மருத்துவமனை மீதான கொடூரத் தாக்குதலுக்கு வேறு குழுதான் காரணம் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தவில்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்த பிறகு பைடன் தெரிவித்தார்.

இதுகுறித்து பைடன் கூறுகையில், 'போர் நிலவரம், பாதுகாப்பு உதவிகள், மனிதாபிமான தேவைகள், காணாமல் போன அமெரிக்கர்கள் குறித்து நெதன்யாகுவிடம் கடினமான கேள்விகளை எழுப்பினேன். இந்த மோதல் பெரிதாக விடமாட்டேன்.

**தீர்வு:** இஸ்ரேலும், பாலஸ்தீன மக்களும் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ இரு தனி நாடுகள் அமைப்பது தான் தீர்வாக அமையும் என்பது எனது கருத்து. தற்போதைய மோதல்கள் இதை இன்னும் வலுவாக்குகின்றன. அண்டை நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயல இஸ்ரேலுடன் அமெரிக்கா தொடர்ந்து பணியாற்றும்.

காஸா, மேற்கு கரைக்கு 100 கோடி அமெரிக்க டாலர் மதிப்பிலான மனிதாபிமான நிவாரண உதவிகள் அளிக்கப்படும்' என்றார்.



இஸ்ரேலின் டெல் அவிவில் அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை புதன்கிழமை சந்தித்த அமெரிக்க அதிபர் ஜோ பைடன்.

## தாக்குதல் அதிர்ச்சியளிக்கிறது: பிரதமர் மோடி



**புது தில்லி, அக். 18:** 'காஸா மருத்துவமனை மீதான தாக்குதல் அதிர்ச்சியளிக்கிறது' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போரில் குடிமக்கள் உயிரிழந்து வருவது தீவிரமான பிரச்னை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து பிரதமர் மோடி 'எக்ஸ்' வலைதளத்தில் புதன்கிழமை வெளியிட்ட பதிவில், 'காஸாவின் அல் அஹ்லி மருத்துவமனை மீதான தாக்குதலில் நேரிட்ட உயிரிழப்புகள் மிகவும் அதிர்ச்சியளிக்கிறது. உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல்கள்; காயமடைந்தோர் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்.

தற்போதைய போரில் குடிமக்கள் உயிரிழப்பது தீவிரமான பிரச்னை என்பதோடு, கவலைக்குரிய விஷயமாக நீடிக்கிறது. மருத்துவமனை மீதான தாக்குதலில் தொடர்புடையவர்கள் பொறுப்பாக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நா. தீர்மானம் தோல்வி

**நியூயார்க், அக். 18:** காஸாவில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள மனிதாபிமான உதவிகளை அளிக்க நடவடிக்கை கோரி ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் பிரேஸில் கொண்டுவந்த தீர்மானத்தை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தோல்வியடையச் செய்தது. 12 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன; ரஷியா, பிரிட்டன் ஆகியவை வெளிநடப்பு செய்தன.

# தாய்மையை வென்ற செய்மை!

உச்சநீதிமன்றம் சந்தித்த மிகச் சிக்கலான வழக்கு ஒன்றின் தீர்ப்பு சமீபத்தில் வெளியாகி இருக்கிறது. இந்த வழக்கில் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான நீதிபதிகள் ஜெ.பி. பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா அடங்கிய மூன்று பேர் அமர்வு என்ன தீர்ப்பு வழங்கப்போகிறது என்பதை இந்தியா மட்டுமல்ல, உலகமே எதிர்பார்த்துக் காத்திருந்தது.

தில்லியைச் சேர்ந்த திருமணமான இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பெண்மணி, மூன்றாவதாகத் தனது வயிற்றில் வளரும் 26 வாரக் கருவைக் கலைக்க வேண்டும் என்று எய்ம்ஸ் மருத்துவ மனையை அணுகியதில் தொடங்கியது இந்தப் பிரச்னை. மருத்துவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்தனர்.

தாயின் வயிற்றில் 26 வாரங்கள் வளர்ந்துவிட்ட கருவின் இதயம் செயல்படத் தொடங்கிவிட்டது. இந்த நிலையில், இதயத்தின் இயக்கத்தை வலுக்கட்டாயமாக நிறுத்திய பிறகுதான், கருக்கலைப்புக்கான நடைமுறையைக் கையாள முடியும். வளர்ந்துவிட்ட கருவின் இதயத் துடிப்பை நிறுத்துவது என்பது கொலைக் குற்றமாகி விடாதா என்பது அந்த மருத்துவர்களின் நியாயமான தயக்கம்.

மருத்துவர்கள் தயங்கியதால், தில்லியைச் சேர்ந்த அந்தப் பெண்மணியின் சார்பில், உச்சநீதிமன்றத்தில் நேரடியாக, அரசியல் சாசன சட்டப்பிரிவு 21-இன் அடிப்படையில் தனது கருவைக் கலைத்துக் கொள்ளும் உரிமை கோரி மனு தாக்கல் செய்யப்படுகிறது. நீதிபதிகள் ஹிமா கோலி, பி.வி. நாகரத்தினா அமர்வு அந்த மனுவை விசாரித்தது.

'தனது கருவைக் கலைக்கும் உரிமை தாய்க்கு உண்டு' என்று கூறி நீதிபதி பி.வி. நாகரத்தினா எடுத்தது போன்று, நீதிபதி ஹிமா கோலியால் முடிவெடுக்க முடியவில்லை. உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான மூன்று நீதிபதிகள் அமர்வுக்கு வழக்கு மாற்றப்பட்டது.

'உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், குழந்தை பெறும் நிலையில் நான் இல்லை. இரண்டாவது குழந்தை பிறந்து ஓராண்டே ஆகியிருக்கும் நிலையில், இன்னொரு குழந்தையை வளர்க்கும் நிலையில் எனது பொருளாதார நிலையும் இல்லை. அதனால் கருவைக் கலைக்க விரும்புகிறேன்' என்பதுதான் அந்தத் தாயின் வாதம்.

26 வாரங்கள் கருக்கலைப்பு குறித்து ஏன் கவலைப்படாமல் இருந்தார் என்பதற்கு அவர் தரும் விளக்கத்தை ஏற்றுக்கொள்வது சற்று சிரமமாகத்தான் இருக்கிறது. இரண்டாவது குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதால் (லாக்டேஷனல் அமெனோரியா) மாதவிடாய் தடைபட்டிருப்பதாக நினைத்ததாகவும், மன அழுத்தத்துக்கு மருந்து எடுத்து வருவதாலும் அது குறித்து சிந்திக்கவில்லை என்பது அந்தத் தாயின் வாதம்.

இந்தியாவில் 1971-இல் கருக்கலைப்புக்கான விதிமுறைகளை ஏற்படுத்திச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 2021-இல் கருக்கலைப்பு (திருத்த) சட்டம் கொண்டுவரப்பட்டது. 20 வாரம் வரையிலான கருவைக் கலைக்க மருத்துவரின் பரிந்துரையையும், 20 முதல் 24 வாரங்களுக்கு இரண்டு மருத்துவர்களின் பரிந்துரையையும், அதற்கும் அதிகமான வளர்ச்சி பெற்ற கருவைக் கலைக்க மாநில அளவிலான மருத்துவக் குழுவின் பரிந்துரையையும் அந்தத் திருத்தச் சட்டம் விதித்தது.

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிப் பெண்கள், 'மைனர்' எனப்படும் சிறுமியர் ஆகியோருக்கு அதிகபட்ச வரம்பு 24 வாரங்களாக அதிகரிக்கப்பட்டது. சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட நபர்கள் அல்லாமல் மற்றவர்களுக்குக் கருக்கலைப்பு குறித்த தகவல்கள் வழங்கப்படுவது தடை செய்யப்பட்டது. கருத்தடை செய்யப்படாமை மட்டுமின்றி, விருப்பம் சார்ந்த திருமண பந்த நிர்பந்தம் இல்லாமல் மகளிருக்குப் பாதுகாப்பான கருக்கலைப்புக்கு சட்ட அங்கீகாரம் தரப்பட்டது.

ஒரு பெண் தனது கருவை சுமப்பதா, வேண்டாமா என்பதைக் கணவர் உள்பட இன்னொருவர் தீர்மானிக்க முடியாது என்பது பெண்ணியவாதிகளின் வாதம். அதைத்தான் நீதிபதி நாகரத்தினா அங்கீகரித்துத் தீர்ப்பு வழங்கினார். அதே நேரத்தில், கருக்கலைப்பு கோரிய அந்த 27 வயதுத் தாயின் கோரிக்கைக்கு இன்னொரு எதிர் வாதம் இருந்தது. அதைத் தனது தீர்ப்பில் தெளிவாகப் பதிவு செய்திருக்கிறார் தலைமை நீதிபதி.

'வயிற்றில் வளரும் கரு எந்தவிதக் குறைபாடும் இல்லாமல் ஆரோக்கியமாக இருப்பதை மருத்துவ பரிசோதனைகள் உறுதிப்படுத்துகின்றன. சட்டப்படியான 24 வாரக் கருக்கலைப்பு வரம்பு கடந்துவிட்டது. வாழ்வதற்கான கருவின் உரிமையா, இல்லை கருவைக் கலைப்பதற்கான தாயின் உரிமையா என்கிற கேள்விக்கு இனிமேல் இடமில்லை. கருவுக்கு 33 வாரங்கள் ஆகியிருந்தால் அப்போதும், கருவைக் கலைக்கும் உரிமை குறித்துப் பேச முடியுமா?' என்கிற அவரது கேள்வி நியாயமானது.

26 வாரங்கள் கடந்துவிட்ட நிலையில், கருக்கலைப்புக்கு அந்தக் கருவின் இதயத் துடிப்பு நிறுத்தப்பட வேண்டும். அதற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட மறுத்துவிட்டது. 'தனது கருவைக் கலைக்க தாய்க்கு உரிமை இருப்பதைப் போலவே, 26 வாரங்களை எட்டிவிட்ட கருவுக்கு, பாதுகாப்பாக வெளியே வந்து வாழும் உரிமை இருக்கிறது. அந்தக் குழந்தையைக் கொல்ல நாங்கள் உத்தரவிட முடியாது' என்கிற நீதிபதிகளின் முடிவில் தவறு காண முடியவில்லை.

சர்வதேசச் சட்டங்களில் கருவுக்கோ, பிறந்த குழந்தைக்கோ எந்தவித உரிமையும் இல்லாமல் இருக்கலாம். கர்ப்பம் தரிப்பதா, வேண்டாமா என்று தீர்மானிக்கும் உரிமை தாய்க்கு இருக்கலாம். ஆனால், வளர்ந்துவிட்ட கருவின் இதயத் துடிப்பை நிறுத்தும் உரிமை யாருக்குத்தான் உண்டு? இந்த வழக்கிற்கு இந்தத் தீர்ப்பு நியாயமானது!

# ரயில்வே துறையின் கவனத்திற்கு...

இரா. சாந்தகுமார்

அதிவேக ரயில்களை இயக்கி பயணிகளின் பயண நேரத்தைக் குறைப்பதில் நமது ரயில்வே துறை காட்டும் ஆர்வம் பாராட்டத்தக்கது. பயணிகளின் விரைவான பயணத்தை கருத்தில் கொண்டு நம் நாட்டில் தயாரித்து இயக்கப்படும் வந்தே பாரத் ரயில்கள் சில வழித்தடங்களில் அதிகபட்சமாக மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ரயில் பாதைகள் மேம்படுத்தப்பட்டால் மணிக்கு 200 கி.மீ. வேகத்தில் ஓடும் வந்தே பாரத் ரயில்களும் வடிவமைக்கப்பட்டு உள்ளன.

இதனிடையே, தெற்கு ரயில்வே நிர்வாகம், விரைவில் முக்கிய வழித்தடங்களில் 1,396 கிலோ மீட்டர் ரயில்வே பாதையை மேம்படுத்தி மணிக்கு 110 கி.மீ. வேகத்தில் ரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தை 2023-24 நிதியாண்டுக்குள் நடைமுறைப்படுத்தப் போவதாகவும் அறிவித்துள்ளது. ரயில்களின் வேகத்தை அதிகரிக்கும் ரயில்வே துறை பயணிகளின் பாதுகாப்பையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

நம் நாட்டில் நாள்தோறும் சராசரியாக 49 ரயில் விபத்துகள் நடப்பதாகவும், இதில் 45 பேர் உயிரிழப்பதாகவும் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. ரயில்வே பாதைகளின் மிக அருகில் அமைந்துள்ள குடியிருப்புகள், கால்நடைகளை ரயில் பாதைகளின் அருகே மேய்ச்சலுக்கு விடுவது, எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்களை பயணிகள் எடுத்துச் செல்வது, போன்றவை ரயில் விபத்துக்கள் நடைபெறுவதற்கான சில காரணங்களாகும்.

ரயில்கள் விபத்துக்குள்ளாவதில் ஆளில்லா லெவல் கிராசிங்குகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. ரயில் வரும் நேரத்தில், லெவல் கிராஸிங் கேட்டுகள் மூடும் நிலையில் வேகமாக ரயில் பாதையைக் கடக்க முயலும் வாகனங்கள், மனிதர்களால் அடிக்கடி ரயில் விபத்துகள் ஏற்படுகின்றன.

நம் நாட்டில் மொத்தமுள்ள 31,846 லெவல் கிராசிங்குகளில், 13,540 லெவல் கிராசிங்குகள் ஆளில்லா லெவல் கிராசிங்குகள். இவற்றை எச்சரிக்கை உணர்வுடன் கடக்க வேண்டும் என்பதில் வாகன ஓட்டிகளும் பொது மக்களில் சிலரும் அக்கறை காட்டுவதில்லை.

இவ்வாறு எதிர்பாராது நடைபெறும் விபத்துகளிலிருந்து பயணிகளைப் பாதுகாப்பது ஒருபுறமெனில், தண்டவாளங்களைச் சேதப்படுத்துவது, ரயில்கள் மீது கல் வீசுவது போன்ற செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகளிடமிருந்தும் ரயில் பயணிகளைப் பாதுகாக்கும் கூடுதல் பொறுப்பும் ரயில்வே துறைக்கு உள்ளது.

வந்தே பாரத் ரயிலில் பயணம் செய்யும் பயணிகளை அச்சுறுத்தும் வகையில் மைசூரு-சென்னை, தில்லி-டேராடூன் உள்ளிட்ட சில வழித்தடங்களில் வந்தே பாரத் ரயில் மீது சமூக விரோதிகள் கற்களை வீசிய சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. கடந்த ஜூன் மாதம், ஒடிஸா மாநிலத்தில் சிக்னல்கள் தவறாக இயங்கியதால் மூன்று ரயில்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்ட விபத்தில் 281 பயணிகள் பலியான துயர சம்பவம் நடைபெற்றது.

எனவே, சிக்னல்கள் சரியான முறையில் இயங்குவதை உறுதி செய்வது ரயில் விபத்துக்களை பெருமளவு தடுக்கும். கூடுதலாக, தண்டவாளங்களை முறையாகப் பராமரிப்பது, அவற்றின் தரத்தை மேம்படுத்துவது, ரயில்வே பாலங்களை வலுப்படுத்துவது போன்றவற்றிலும் ரயில்வே துறை சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

ரயில்வே துறையில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதும் ரயில் விபத்துகளைத் தவிர்க்க உதவும். ரயில் என்ஜின் ஓட்டுநர்கள் ஓய்வின்றி தொடர்ச்சியாக வேலை செய்வதும் சில ரயில் விபத்துகள் நடைபெறக் காரணம். ரயில்வே வாரியம் நிர்ணயித்துள்ள பணி நேரத்திற்கு அதிகமாக ரயில் என்ஜின் ஓட்டுநர்கள் பணியாற்றக்கூடாதென்ற வழிகாட்டுதல் பின்பற்றப்பட வேண்டும்.

ரயில் விபத்துகளைத் தவிர்ப்பதில் 'கவச்' கருவியின் பங்கு குறிப்பிடத்தக்கது. எனவே, 'கவச்' கருவியை அனைத்து ரயில்களிலும் பொருத்த வேண்டும். ரயில் நிலையங்களிலும் பயணிகளின் பாதுகாப்பினை ரயில்வே துறை உறுதி செய்ய வேண்டும். 2016-ஆம் ஆண்டு, சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் இளம்பெண் கொலை செய்யப்பட்டதையொட்டி, அனைத்து ரயில் நிலையங்களிலும் பயணிகள் பாதுகாப்பின் ஒரு நடவடிக்கையாக கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட வேண்டுமென சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது.

ஏறத்தாழ ஏழு ஆண்டுகளுக்குப் பிறகும் தமிழகத்தில் உள்ள 442 ரயில் நிலையங்களில் 35 ரயில் நிலையங்களில் மட்டுமே அதாவது பத்து சதவீதத்திற்கும் குறைவான ரயில் நிலையங்களில் மட்டுமே தெற்கு ரயில்வே கண்காணிப்பு கேமராக்களை நிறுவியுள்ளது வருந்தத்தக்கது.

பயணச்சீட்டு இன்றி ரயில்களில் பயணம் செய்வோர் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதால் ரயில்வே துறைக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. தமிழ்நாட்டின் சேலம் ரயில்வே கோட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் பயணச்சீட்டு இன்றி பயணம் செய்தவர்கள், அதிகப்படியான எடையுள்ள பார்சல் கொண்டு சென்றவர்கள், உரிய பயணச்சீட்டு இன்றி முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் பயணம் செய்தோர் என 16,273 நபர்களிடமிருந்து ரூ. ஒரு கோடியே ஐந்து லட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள 64 ரயில்வே கோட்டங்களில் சராசரியாக ஒரு மாதத்தில், ஒரு கோட்டத்துக்கு குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் என அபராதம் வசூலிக்கப்பட்டால் கூட ஒரு மாதத்திற்கு இந்தியாவில் 64 கோடி ரூபாய் அபராதத் தொகையாக வசூலிக்கப்படும். இந்நிலையில் நமது ரயில்வே துறைக்கு ஆண்டுக்கு ஏறத்தாழ ரூ.768 கோடி வருவாய் கிடைக்க வழியேற்படும்.

2023-24-ஆம் ஆண்டுக்கான நம் நாட்டின் நிதிநிலை அறிக்கையில் ரயில்வே துறைக்கு ரூ. 2.40 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ரயில்வே துறையின் கட்டமைப்பு மேலும் மேம்பாடடையும் என்பதில் ஐயமில்லை. நம் நாட்டில் நாள்தோறும் 22,593 தொடர் வண்டிகள் இயக்கப்படுகின்றன.

இதில் பயணிகளுக்கான 13,452 தொடர் வண்டிகளில் தினந்தோறும் சுமார் 2.4 கோடி மக்கள் பயணிக்கின்றனர். இவ்வாறு லட்சக்கணக்கானோர் தங்களின் அன்றாடப் பயணத்திற்கு ரயில்களையே சார்ந்திருக்கும் சூழலில், பயணிகளின் விரைவான பயணத்திற்கு மட்டுமின்றி பாதுகாப்பான பயணத்திற்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டியது ரயில்வே துறையின் கடமையாகும்.

EVA STALIN IAS

# நியூஸிலாந்துக்கு எளிதான வெற்றி

## ஆப்கானிஸ்தான் தோல்வி



ஆட்டத்தின் முடிவில் ஆப்கானிஸ்தான் - நியூஸிலாந்து வீரர்கள்.

**சென்னை, அக். 18:** உலகக் கோப்பை கிரிக்கெட்டின் 16-ஆவது ஆட்டத்தில் நியூஸிலாந்து 149 ரன்கள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை புதன்கிழமை வென்றது.

நியூஸிலாந்து தனது வெற்றி நடையைத் தொடர, ஆப்கானிஸ்தான் 3-ஆவது தோல்வியை சந்தித்துள்ளது.

முந்தைய ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் இங்கிலாந்துக்கு அதிர்ச்சி அளித்து வென்ற ஆப்கானிஸ்தான், இந்த ஆட்டத்தில் நியூஸிலாந்தின் சவாலை எதிர்கொள்ள முடியாமல் சரிந்தது. நியூஸிலாந்து பேட்டர்கள் கொடுத்த 7 கேட்ச்களை தவறவிட்டதும் அவர்களுக்கு பாதகமானது.

இந்த ஆட்டத்துக்கான பிளேயிங் லெவனில், நியூஸிலாந்து தரப்பில் கேன் வில்லியம்சனுக்கு பதிலாக வில் யங் சேர்க்கப்பட்டிருந்தார். ஆப்கானிஸ்தான் தரப்பில் மாற்றம் செய்யப்படவில்லை. டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் ஃபீல்டிங்கை தேர்வு செய்தது.

நியூஸிலாந்து பேட்டிங்கில் தொடக்க வீரர் டெவன் கான்வே 3 பவுண்டரிகளுடன் 20 ரன்களுக்கு வெளியேற, உடன் வந்த வில் யங் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஒன் டவுனாக வந்த ரச்சின் ரவீந்திரா, வில் யங்குடன் இணைய, 2-ஆவது விக்கெட்டுக்கு அந்த இணை 79 ரன்கள் சேர்த்தது.

இதில் ரவீந்திரா 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 32 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். அஸ்மதுல்லா வீசிய அதே 21-ஆவது ஓவரில் வில் யங்கும் 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உள்பட 54 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினார்.

4-ஆவது வீரரான டேரில் மிட்செல் 1 ரன்னுக்கு விக்கெட்டை பறிகொடுக்க, 110 ரன்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது நியூஸிலாந்து. இந்நிலையில், கேப்டன் டாம் லேதம் - கிளென் ஃபிலிப்ஸ் கூட்டணி விக்கெட் சரிவைத் தடுத்து ரன்கள் சேர்த்தது.

5-ஆவது விக்கெட்டுக்கு இந்த பார்ட்னர்ஷிப் 144 ரன்கள் சேர்த்து அசத்தியது. இதில் ஃபிலிப்ஸ் 4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உள்பட 71 ரன்கள் அடிக்க, அதே 48-ஆவது ஓவரில் லேதமும் 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 68 ரன்களுக்கு வீழ்ந்தார். அவர்கள் விக்கெட்டை நவீன் உல் ஹக் சாய்த்தார்.

ஓவர்கள் முடிவில் மார்க் சாப்மேன் 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 25, மிட்செல் சேன்ட்னர் 1 பவுண்டரியுடன் 7 ரன்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆப்கானிஸ்தான் பௌலிங்கில் நவீன் உல் ஹக், அஸ்மதுல்லா ஒமர்ஸாய் ஆகியோர் தலா 2, ரஷீத் கான், முஜீப் உர் ரஹ்மான் ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினர்.

பின்னர் 289 ரன்களை இலக்காகக் கொண்டு ஆடிய ஆப்கானிஸ்தான் விக்கெட்டுகளை வரிசையாக இழந்தது. ரஹ்மானுல்லா குர்பாஸ் 1 சிக்ஸருடன் 11, உடன் வந்த இப்ராஹிம் ஜத்ரான் 2 பவுண்டரிகளுடன் 14 ரன்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

அதிகபட்சமாக, ஒன் டவுனாக வந்த ரஹ்மத் ஷா 1 பவுண்டரியுடன் 36 ரன்கள் சேர்த்து ஆட்டமிழக்க, கேப்டன் ஹஷ்மதுல்லா ஷாஹிதி 1 பவுண்டரியுடன் 8, அஸ்மதுல்லா ஒமர்ஸாய் 2 பவுண்டரிகளுடன் 27, முகமது நபி 1 பவுண்டரியுடன் 7, ரஷீத் கான் 1 சிக்ஸருடன் 8, முஜீப் உர் ரஹ்மான் 4 ரன்கள் அடித்து விக்கெட்டை பறிகொடுத்தனர்.

நவீன் உல் ஹக், ஃபஸல்ஹக் ஃபரூக்கி டக் அவுட்டாக, ஆப்கானிஸ்தான் ஆட்டம் முடிவுக்கு வந்தது. நியூஸிலாந்து பௌலர்களில் மிட்செல் சேன்ட்னர், லாக்கி ஃபெர்குசன் ஆகியோர் தலா 3, டிரென்ட் போல்ட் 2, மாட் ஹென்றி, ரச்சின் ரவீந்திரா ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.

### சுருக்கமான ஸ்கோர்

**நியூஸிலாந்து**

**288/6** (50 ஓவர்கள்)

| | |
|---|---|
| கிளென் ஃபிலிப்ஸ் | 71 |
| டாம் லேதம் | 68 |
| வில் யங் | 54 |
| **பந்துவீச்சு** | |
| நவீன் உல் ஹக் | 2/48 |
| அஸ்மதுல்லா ஒமர்ஸாய் | 2/56 |
| ரஷீத் கான் | 1/43 |

**ஆப்கானிஸ்தான்**

**139/10** (34.4 ஓவர்கள்)

| | |
|---|---|
| ரஹ்மத் ஷா | 36 |
| அஸ்மதுல்லா ஒமர்ஸாய் | 27 |
| இக்ரம் அலிகில் | 19* |
| **பந்துவீச்சு** | |
| லாக்கி ஃபெர்குசன் | 3/19 |
| மிட்செல் சேன்ட்னர் | 3/39 |
| டிரென்ட் போல்ட் | 2/18 |

### புள்ளிகள் பட்டியல்

நியூஸிலாந்து - ஆப்கானிஸ்தான் ஆட்டம் (16) வரை

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | ரன் ரேட் |
|---|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 4 | 4 | 0 | 8 | 1.923 |
| இந்தியா | 3 | 3 | 0 | 6 | 1.821 |
| தென்னாப்பிரிக்கா | 3 | 2 | 1 | 4 | 1.385 |
| பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 4 | -0.137 |
| இங்கிலாந்து | 3 | 1 | 2 | 2 | -0.084 |
| வங்கதேசம் | 3 | 1 | 2 | 2 | -0.699 |
| ஆஸ்திரேலியா | 3 | 1 | 2 | 2 | -0.734 |
| நெதர்லாந்து | 3 | 1 | 2 | 2 | -0.993 |
| ஆப்கானிஸ்தான் | 4 | 1 | 3 | 2 | -1.250 |
| இலங்கை | 3 | 0 | 3 | 0 | -1.532 |

# அரசின் தொழில் வழிகாட்டு நிறுவனத்துக்கு ஐ.நா.விருது: முதல்வர் பாராட்டு

**சென்னை, அக்.18:** ஐ.நா. அமைப்பின் விருது பெற்ற தமிழக அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக முதல்வர் எக்ஸ் தள பக்கத்தில் புதன்கிழமை கூறியிருப்பதாவது:

புதுப்பித்தக்க ஆற்றல் சார் முதலீடுகளை அதிகரிப்பதில் ஆற்றிய சிறப்பான பணிகளுக்காக ஐ.நா. அமைப்பின் மதிப்புமிகு முதலீட்டு ஊக்குவிப்பு விருது -2023-ஐ பெற்றுள்ள தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்துக்கு என் பாராட்டுகள்.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் புதுமையான அணுகுமுறைகளும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளில் கொண்டுள்ள அர்ப்பணிப்பும் உண்மையிலேயே குறிப்பிடத்தக்கவை. அவை பசுமையான எதிர்காலத்துக்கான திராவிட மாடல் அரசின் உறுதியான ஈடுபாட்டைப் பறைசாற்றுவதாக அமைந்திருக்கின்றன.

இந்தப் பெருமைமிகு மைல்கல்லை அடைந்ததற்காக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் விஷ்ணு மற்றும் கடுமையாக உழைத்து வரும் அனைத்து உயர் அலுவலர்களுக்கும் பாராட்டுகள் என்று கூறியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.


EVA STALIN IAS ACADEMY